**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவையாறு**

முன்னிலை: **திரு. பெ.சந்திரசேகர்,** பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவையாறு

2023ம் ஆண்டு ஜீலை மாதம் 27 ஆம் தேதி வியாழன்கிழமை

(2053 திருவள்ளுவராண்டு, சுபகிருது வருடம், ஆடி மாதம் 08ஆம் நாள்)

**அ.வ.எண். 176/2015**

**CNR.No. TNTJ**150000642015

லூர்துராஜ் ...**வாதி**

**– எதிர் –**

V. அவிலாதெரஸ் ...**பிரதிவாதி**

இந்த வழக்கு 16.11.2015 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.பாலமுரளி அவர்களும் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D. சுவாமிநாதன் அவர்களும் ஆஜராகி இறுதி விசாரணைக்கு வந்த போது இருதரப்பு வாதங்களை கேட்டு இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

வாதி இவ்வழக்கை தாவா 'C' ஷெட்டியூல் சொத்தைப் பொறுத்து வாதி உரிமையாளர் என விளம்புகை செய்தும், மேலும் தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில் பிரதிவாதியால் கட்டியுள்ள கட்டிடத்தை இடித்து காலி இடமாக வாதி வசம் சுவாதீனத்தை பிரதிவாதி ஒப்படைக்குமாறும்,

தாவா 'C' ஷெட்டியூல் சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதி ஒப்படைக்காத பட்சத்தில் நீதிமன்றம் மூலம் தாவா 'C' ஷெட்டியூல் சொத்தை பிரதிவாதியிடமிருந்து வசப்படுத்தி வாதி வசம் ஒப்படைக்குமாறும், கோரி தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. வழக்குரையின் சுருக்கம்</u>:**

(I) தாவா சொத்தானது வாதிக்கு உரிமையுடையதாகும். தாவா சொத்தானது மைக்கேல்பட்டி கிராமம், புல எண்.96/65 – 0.02 சென்ட் ஆகும். வாதி தாவா சொத்து தொடர்பாக விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனப் பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

(ii) .தாவா 'A' ஷெட்டியூல் சொத்தில் ஒருபகுதி தான் தாவா 'B மற்றும் 'C' ஷெட்டியூல் சொத்தாகும். வாதி இந்த வழக்கில் தாவா 'C' ஷெட்டியூல் தொடர்பாக பரிகாரம் கோரி விளம்புகை மற்றும் சுவாதீனப் பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியின் வழக்கானது நீதிமன்றத்திற்கு எளிதாக விளங்கவேண்டும் என்பதற்காக தாவா 'A' மற்றும் 'B' ஷெட்டியூல் சொத்தினை வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்.

(iii) தாவா 'A' ஷெட்டியூல் சொத்தானது ஆரம்ப காலத்தில் இராஜேஸ்வரி என்பவருக்கு உரிமையுடையதாகும். பின்னர் வாதி தாவா 'A' ஷெட்டியூல் சொத்தை கடந்த 03.08.1988ல் ராஜேஸ்வரியிடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி கிரைய ஆவணம் திருக்காட்டுப்பள்ளி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.705/1988 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. வாதி தாவா 'A' ஷெட்டியூல் சொத்து தொடர்பாக வாதி பெயரில் 03.08.1988ல் ஏற்பட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் இந்த வழக்குரையுடன் ஆவண எண்.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஷரத்துக்களை இந்த வழக்குரையின் ஒரு பாகமாக ஏற்றுக்கொள்ளுமாறு வாதி தெரிவித்துக் கொள்கிறார். தாவா 'A' ஷெட்டியூல் சொத்தின் விஸ்தீரணம் 20 சென்ட்டாகும். தாவா 'A' ஷெட்டியூல் சொத்தை வாதி கிரையம் பெற்றபோது மனைப்பகுதியாக இருந்தது. வாதி தாவா 'A' ஷெட்டியூல் சொத்தை கிரையம் பெற்ற தேதி முதல் அனுபவம் செய்து வருகிறார்.

(iv) தாவா 'A' ஷெட்டியூல் சொத்தானது மூன்று உட்பிரிவுகள் கொண்ட 20 சென்ட் விஸ்தீரணம் கொண்டதாகும். வாதி தாவா 'A' ஷெட்டியூல் சொத்தின் விஸ்தீரணமான 20 சென்ட்டில் கடந்த 15.12.1998ல் புல எண்.96/5Cல் 4 சென்ட் மற்றும்

புல எண்.96/6J ல் 5 சென்ட் ஆகக் கூடுதல் 9 சென்ட் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். தாவா 'B' ஷெட்டியூல் சொத்து தொடர்பாக 15.12.1998 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் ஆவண எண்.2 ஆக வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது தாவா ' B' ஷெட்டியூல் சொத்தானது பிரதிவாதிக்கு உரிமையுடைய சொத்தாகும்.

(v) தாவா 'B' ஷெட்டியூல் சொத்தை பிரதிவாதி கிரையம் பெற்ற பின்னர் மேற்படி 9 சென்ட்டில் ஒரு பகுதியில் ஓட்டுவீடு கட்டி அனுபவம் செய்து வந்தார். தாவா ' A' ஷெட்டியூல் சொத்தில் பிரதிவாதிக்கு 15.12.1998 ல் கிரையம் செய்து கொடுத்தது போக மீதமுள்ள சொத்தான 11 சென்ட் வாதியின் அனுபவத்தில் தொடர்ந்து இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 3 மாதத்திற்கு முன் பிரதிவாதி மேற்படி 9 சென்ட்டில் மற்றொரு பகுதியில் ஆர்.சி.சி. ஓட்டுக் கட்டிடம் கட்டி வருகிறார். அவ்வாறு ஆர்.சி.சி. ஓட்டுக்கட்டிடம் கட்டும்போது தாவா 'A' ஷெட்டியூல் சொத்தில் வாதிக்கு உரிமையும், அனுபவமும் உடைய மேற்படி 11 சென்ட்டில் 2 சென்ட்டை அதாவது தாவா ' C" ஷெட்டியூல் சொத்தாக குறிப்பிட்டுள்ளதையும் ஆக்கிரமிப்பு செய்து கட்ட முயற்சி செய்துள்ளார். அந்த சமயத்திலேயே வாதியால் ஆட்சேபணை செய்யப்பட்டது. வாதி, பிரதிவாதியிடம் நில அளவையர் மூலம் அளவீடு செய்து கொள்ளலாம் என தெரிவித்தபோது அதற்கு பிரதிவாதி முழுமையாக ஒத்துழைக்கவில்லை. மேலும் பிர்கா நில அளவையரை உட்கை செய்துகொண்டு தொடர்ந்து ஆர்.சி.சி. கட்டிடம் கட்டி வந்தார். பின்னர் தற்போது வாதியால் அறிவிப்பு கொடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு தலைமை நில அளவையர் மூலம் அளவீடு செய்தபோது பிரதிவாதி வாதிக்கு உரிமையுடைய தாவா 'C' ஷெட்டியூல் சொத்தை 'B' ஷெட்டியூல் சொத்துடன் இணைத்து ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டிவருவது தெரிய வந்தது. பின்னர் வாதி பிரதிவாதியிடம் ஆக்கிரமிப்பு செய்த இடத்தை ஒப்படைக்குமாறு தெரிவித்தபோது பிரதிவாதி ஒப்படைப்பதாக தெரிவித்து தொடர்ந்து காலதாமதம் செய்து வந்தார். இருப்பினும் தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில் எந்தவிதமான கட்டிடப் பணியும் செய்யாமல் இருந்து வந்தார். பின்னர் மீண்டும் அக்டோபர் இரண்டாம் வாரத்தில் தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில் கட்டிடம் கட்டும் பணி தொடங்கியவுடன் வாதியால் மேற்படி வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விவரத்தைக் குறிப்பிட்டு கடந்த 14.10.2015 அன்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி

பெற்றுக்கொண்டு எந்தவிதமான பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை. ஆனால் பிரதிவாதி தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில் தொடர்ந்து கட்டிடம் கட்டும் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார். பிரதிவாதியின் மேற்படி செயலானது சட்டத்திற்குப் புறம்பானதாகும். பிரதிவாதிக்கு தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில் தற்போது மூன்று மாதங்களுக்கு முன்பு ஆக்கிரமிப்பு செய்யும்வரை தாவா 'C' ஷெட்டியூல் சொத்தை அனுபவம் செய்ததில்லை. பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு பின்னர் தாவா 'C' ஷெட்டியூல் சொத்திற்கு தான் உரிமையாளர் என்று ஊர் முழுவதும் பிரகடனம் செய்து வருகிறார். வாதி மேற்படி பிரச்சனைக்கு நீதிமன்றத்தை அணுகுவதைத் தவிர நிரந்தர தீர்வு காண்பதற்கு வேறுவழியில்லாததால் வாதி பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தற்போது பிரதிவாதி தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில் வாதியின் உரிமையை மறுப்பதால் வாதி, பிரதிவாதிக்கு எதிராக தாவா 'C' ஷெட்டியூல் சொத்து தொடர்பாக விளம்புகை மற்றும் சுவாதீனப் பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலையை பிரதிவாதி ஏற்படுத்தி விட்டார்.

(vi) வாதி பிரதிவாதியை 03.11.2015 அன்று நேரிடையாக சந்தித்து தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில் கட்டிடம் கட்டும் பணியை நிறுத்தி கட்டிய கட்டிடத்தை இடித்து சுவாதீனத்தை ஒப்படைக்குமாறு தெரிவித்தும், பிரதிவாதி ஒத்துக்கொள்ளாமல் தற்போது விரைவாக தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில் கட்டிடம் கட்டும் பணியை தொடர்ந்து செய்து வருகிறார்.

(vii) எனவே வாதி இவ்வழக்கை தாவா 'C' ஷெட்டியூல் சொத்தைப் பொறுத்து வாதி உரிமையாளர் என விளம்புகை செய்தும, மேலும் தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில் பிரதிவாதியால் கட்டியுள்ள கட்டிடத்தை இடித்து காலி இடமாக வாதி வசம் சுவாதீனத்தை பிதிவாதி ஒப்படைக்குமாறும்,

தாவா 'C' ஷெட்டியூல் சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதி ஒப்படைக்காத பட்சத்தில் நீதிமன்றம் மூலம் தாவா 'C' ஷெட்டியூல் சொத்தை பிரதிவாதியிடமிருந்து வசப்படுத்தி வாதி வசம் ஒப்படைக்குமாறும், வழக்கின் செலவுத்தொகை மற்றும் பிற பரிகாரங்கள் கோரியும் தாக்கல் செய்துள்ளார்.

**3. எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

(i) இந்த வழக்கில் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளைத் தவிர மற்ற அனைத்து சங்கதிகளையும் இந்த பிரதிவாதி மறுக்கிறார். இந்த வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் நிலை நிற்கத்தக்கதல்ல என்பதால் இந்த வழக்கு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்றாகும்.

(ii) இந்த பிரதிவாதி III (1, 2, 3,4) பாராவில் வாதியால் செய்யப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுக்கிறார். தவறானது மற்றும் பொய்யானது. பிரதிவாதி வாதியிடமிருந்து அவர் கிரையம் வாங்கிய நிலத்தில் புல எண்.96/5C ல் 4 சென்ட்ம், புல எண்.96/6J ல் 5 சென்ட்ம் 15.12.1998 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்று அன்று முதல் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருந்து வந்து வழக்கு சொத்தின் கிழக்கு மூலையில் வேலி அமைத்திருந்தார். வழக்கு சொத்தில் மூன்று தென்னை மரங்கள், 5 பூவரசு மரங்கள் மற்றும் வேலியில் உள்ள மற்ற மரங்கள் ஆகியவை பிரதிவாதியின் சொத்தை வாதியின் சொத்திலிருந்து பிரிக்கிறது. தாவா சொத்துக்கான பட்டா, வாதியிடமிருந்து வாங்கப்பட்ட 9 சென்ட் உட்பட பிரதிவாதியின் பெயரில் உள்ளது.

(iii) பிரதிவாதி அவருடைய கணவர் வின்செண்ட் என்பவருக்கு தாவா சொத்தின் S.No.96/7E இன் தென்புறமும், S.No.96/6J இன் மங்களூர் ஓடு போட்ட வீடு இருந்தது. பிரதிவாதியின் குடும்பத்தினர் அங்கு வசித்து வந்தனர் பிரதிவாதியின் கணவர் தான் அதன் உரிமையார். வாதியிடமிருந்து S.No.96/6J சொத்தை வாங்கிய பிறகு பிரதிவாதியால் எண்.96/6J இன் வடக்குப் பகுதியில் ஒரு ஓடு வேயப்பட்ட வீடு கட்டப்பட்டது. கடந்த 2 ஆண்டுகளாக 96/6J மற்றும் S.No.96/7E இல் தெற்கு பகுதியில் ஆர்.சி.சி வீடு பிரதிவாதியால் கட்டப்பட்டு வருகிறது. அவை பிரதிவாதியின் கணவர் வின்செண்ட்டுக்கு சொந்தமானது ஆகும். பிரதிவாதி புதிய வீட்டைக் கட்டும் போது அவரது வீட்டின் கிழக்கில் 6 அடி கிழக்கு-மேற்கு பாதையை விட்டு கட்டினார். "C" அட்டவணை சொத்து வாதியால் பிரதிவாதிக்கு 15.12.1998 ல் கிரைய பத்திரத்தின் மூலம் கொடுத்த 9 சென்ட் பகுதியும் அடங்கும்.

(iv) வாதியின் பாரா III (5) இல் உள்ள வாதியின் குற்றச்சாட்டு வாதிக்கு சொந்தமான SNo.96/6J இல் 2 சென்ட்களை பிரதிவாதி ஆக்கிரமித்து விட்டார்

என்பது முற்றிலும் தவறு. வாதி இந்த தவறான வழக்கை தாக்கல் செய்யும் நோக்கத்திற்காக மேற்படி பொய்யான சங்கதிகளை கூறியுள்ளார். பிரதிவாதியால் செய்யப்பட்ட கட்டுமானத்தை வாதி எதிர்த்ததாக சொல்லியுள்ளதும், ஒரு சர்வேயர் உதவியுடன் சொத்தை அளவிடுமாறு பிரதிவாதியைக் கேட்டபோது பிரதிவாதி ஒத்துழைக்கவில்லை என்பதெல்லாம் பொய்யானவை ஆகும். உண்மையில் பிரதிவாதி முதல் தளத்தை கட்டும் வரை வாதி எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. இது போன்ற சொத்துக்களை கணக்கெடுக்க வாதி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. முதல் முறையாக இந்நீதிமன்றத்தின் மூலம் தான் சர்வேயர் நியமிக்கப்பட்டு அளவீடு செய்யப்பட்டது.

(v) உண்மையில் வாதி 14-10-2015 அன்று ஒரு வக்கீல் நோட்டீஸை வெளியிட்டார். பிரதிவாதி அதற்கு நடவடிக்கை எடுக்கும்போது இவ்வழக்கு சம்மனைப் பெற்றார் 14-10-2015 தேதியிட்ட வக்கீல் நோட்டீஸை வாதிக்கு பதில் நோட்டீஸ் கொடுக்கவும், வழக்குத் தாக்கல் செய்த பின்னர் வாதி 25-11-2015 அன்று அவமதிப்பு நோட்டீஸ் அனுப்பினார். ஆனால் பிரதிவாதியால் 27-11-2015 அன்று பதில் அளிக்கப்பட்டது. பிரதிவாதி S.N. 96/6J ல் தனது வீட்டைக் கட்டினார். 5 சென்ட் நிலத்துக்குள் உள்ள கிணறு பிரதிவாதியால் வாங்கப்பட்டது. பிரதிவாதி ஒருபோதும் அத்துமீறவில்லை. வழக்கிற்கு சரியான வழக்குமூலம் இல்லை. மேற்படி வழக்குமூலம் கற்பனையானது ஆகும். வாதி சுத்தமான கரங்களுடன் இந்நீதிமன்றத்தை அணுகவில்லை. எனவே வாதியின் இவ்வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

4. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் எழு வினாக்கள் வனையப்பட்டன.

1. Whether the plaintiff is entitled to the relief of declaration as prayed for?
2. Whether the plaintiff is entitled to the relief of recovery of possession as prayed for?
3. To what other reliefs the plaintiff is entitled to?

வாதி தரப்பில் ஜெசிந்தா என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.1 மூலம் வா.சா.ஆ 1 முதல் 9 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. பழனி (வழக்கறிஞர்) என்பவர் நீ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சத்தியபாமா ( ஆய்வாளர் நில அளவை துறை) என்பவர் நீ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதி தரப்பில் அவிலாதெரஸ் என்பவர் பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார். இவர் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

(I) தாவா சொத்தானது வாதிக்கு உரிமையுடையது. தாவா சொத்தானது மைக்கேல்பட்டி கிராமம், புல எண்.96/6J - 0.02 சென்ட். வாதி தாவா சொத்து தொடர்பாக விளம்புகை மற்றும் சொத்து சுவாதீனப் பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா ' A' ஷெட்டியூல் சொத்தில் ஒருபகுதி தான் தாவா ' B' ஷெட்டியூல் மற்றும் ' C' ஷெட்டியூல் சொத்து. வாதி இந்த வழக்கில் தாவா ' C' ஷெட்டியூல் தொடர்பாக பரிகாரம் கோரி விளம்புகை மற்றும் சுவாதீனப் பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதியின் வழக்கானது நீதிமன்றத்திற்கு எளிதாக விளங்கவேண்டும் என்பதற்காக தாவா ' A' மற்றும் ' B ' ஷெட்டியூல் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார். தாவா 'A' ஷெட்டியூல் சொத்தானது ஆரம்ப காலத்தில் இராஜேஸ்வரி என்பவருக்கு உரிமையுடையது. பின்னர் வாதி தாவா ' A' ஷெட்டியூல் சொத்தை கடந்த 03.08.1988 ல் ராஜேஸ்வரியிடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி கிரைய ஆவணம் திருக்காட்டுப்பள்ளி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.705/1988 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. வாதி தாவா ' A ' ஷெட்டியூல் சொத்து தொடர்பாக வாதி பெயரில் 03.08.1988 ல் ஏற்பட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் இந்த வழக்குரையுடன் ஆவண எண். 1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) தாவா ' A ' ஷெட்டியூல் சொத்தின் விஸ்தீரணம் 20 சென்ட். தாவா ' A ' ஷெட்டியூல் சொத்தை வாதி கிரையம் பெற்றபோது மனைப்பகுதியாக இருந்தது. வாதி தாவா A ' ஷெட்டியூல் சொத்தை கிரையம் பெற்ற தேதி முதல் அனுபவம் செய்து வருகிறார். 1) புல எண். 96/5 C 0.04 சென்ட் 2) புல எண். 96/7G .00 1 1/3 சென்ட் 3) புல எண். 96/ 6J -014 2/3 சென்ட் கூடுதல் 0.20 சென்ட்.

(iii) தாவா ' A ' ஷெட்டியூல் சொத்தானது மூன்று உட்பிரிவுகள் கொண்ட 20 சென்ட் விஸ்தீரணம் கொண்டது. வாதி தாவா A ஷெட்டியூல் சொத்தின் விஸ்தீரணமான 20 சென்ட்டில் கடந்த 15.12.1998 ல் புல எண்.95/5c ல் 4 சென்ட் மற்றும் புல எண்.96/6J ல் 5 சென்ட் ஆக கூடுதல் 9 சென்ட் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். தாவா ' B

ஷெட்டியூல் சொத்து தொடர்பாக 15.12.1998 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் ஆவண எண்.2 ஆக வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது தாவா ' B ' ஷெட்டியூல் சொத்தானது பிரதிவாதிக்கு உரிமையுடைய சொத்தாகும்.

(iv) தாவா ' B ' ஷெட்டியூல் சொத்தை பிரதிவாதி கிரையம் பெற்ற பின்னர் மேற்படி 9 சென்ட்டில் ஒரு பகுதியில் ஓட்டுவீடு கட்டி அனுபவம் செய்து வந்தார். தாவா ' A ' ஷெட்டியூல் சொத்தில் பிரதிவாதிக்கு 15.12.1998 ல் கிரையம் செய்து கொடுத்தது போக மீதமுள்ள சொத்தான 11 சென்ட் வாதியின் அனுபவத்தில் தொடர்ந்து இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 3 மாதத்திற்கு பின் பிரதிவாதி மேற்படி 9 சென்ட்டில் மற்றொரு பகுதியில் ஆர்.சி.சி. ஒட்டுக் கட்டிடம் கட்டி வருகிறார். அவ்வாறு ஆர்.சி.சி. ஒட்டுக்கட்டிடம் தற்போது தாவா ' A ஷெட்டியூல் சொத்தில் வாதிக்கு உரிமையும், அனுபவமும் உடைய மேற்படி 11 சென்ட்டில் 2 சென்ட்டை அதாவது தாவா ' C ' ஷெட்டியூல் சொத்தாக குறிப்பிட்டுள்ளதையும் ஆக்கிரமிப்பு செய்து கட்ட முயற்சி செய்துள்ளார். அந்த சமயத்திலேயே வாதியால் ஆட்சேபனை செய்யப்பட்டது.

(v) பின்னர் வாதியால் அறிவிப்பு கொடுப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு தலைமை நில அளவையர் மூலம் அளவீடு செய்தபோது பிரதிவாதி வாதிக்கு உரிமையுடைய தாவா ' C ' ஷெட்டியூல் சொத்தை மேற்படியான ஷெட்டியூல் சொத்துடன் இணைத்து ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டிவருவது தெரிய வந்தது. பின்னர் வாதி பிரதிவாதியிடம் ஆக்கிரமிப்பு செய்த இடத்தை ஒப்படைக்குமாறு தெரிவித்தபோது பிரதிவாதி ஒப்படைப்பதாக தெரிவித்து தொடர்ந்து காலதாமதம் செய்து வந்தார். இருப்பினும் தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில் எந்தவிதமான கட்டிடப்பணியும் செய்யாமல் இருந்து வந்தார். பின்னர் மீண்டும் அக்டோபர் இரண்டாம் வாரத்தில் தாவா ' C' ஷெட்டியூல் சொத்தில் கட்டிடம் கட்டும் பணி தொடங்கியவுடன் வாதியால் மேற்படி வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விவரத்தைக் குறிப்பிட்டு கடந்த 14.10.2015 அன்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டு எந்தவிதமான பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை. ஆனால் பிரதிவாதி தாவா ' C ' ஷெட்டியூல் சொத்தில் தொடர்ந்து கட்டிடம் கட்டும் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார். பிரதிவாதியின் மேற்படி செயலானது சட்டத்திற்கு புறம்பானதாகும். 'பிரதிவாதிக்கு 'தவா 'C' ஷெட்டியூல் சொத்தில் தற்போது, 3 மாதங்களுக்கு முன்பு ஆக்கிரமிப்பு செய்யும் வரை 'C' ஷெட்டியூல் சொத்தை அனுபவம் செய்ததில்லை. பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு பின்னர் தாவா ' C ' ஷெட்டியூல் சொத்திற்கு தான் உரிமையாளர் என்று ஊர் முழுவதும் பிரகடனம் செய்து வருகிறார். வாதி

மேற்படி பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு நீதிமன்றத்தை அணுகுவதைத் தவிர வேறுவழியில்லாததால் வாதி பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளார். தற்போது பிரதிவாதி தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில் வாதியின் உரிமையை மறுப்பதால், வாதி பிரதிவாதிக்கு எதிராக தாவா ' C ' ஷெட்டியூல் சொத்து தொடர்பாக விளம்புகை மற்றும் சுவாதீனப் பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலையை பிரதிவாதி ஏற்படுத்திவிட்டார்.

(vi) வாதி பிரதிவாதியை 03.11.2015 அன்று நேரிடையாக சந்தித்து தாவா ' C ' ஷெட்டியூல் சொத்தில் கட்டிடம் கட்டும் பணியை நிறுத்தி, கட்டிய கட்டிடத்தை இடித்து சுவாதீனத்தை ஒப்படைக்குமாறு தெரிவித்தும் பிரதிவாதி ஒத்துக்கொள்ளாமல் தற்போது விரைவாக தாவா ' C ' ஷெட்டியூல் சொத்தில் கட்டிடம் கட்டும் பணிணை தொடர்ந்து செய்து முடித்துவிட்டார்.

(vii) இந்த பிரதிவாதி எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் முற்றிலும் தவறானதாகும். மேலும் வாதியிடமிருந்து 96/5C ல் 4 சென்ட்டையும், 96/6J ல் 5 சென்ட்டையும் ஆக கூடுதல் 9 சென்ட்டையும் 15.12.1998 வாதியிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளார் என்பதை பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளார்.

(viii) ஆனால் எதிர் வழக்குரையில் புல எண். 96/6J ல் இரண்டு சென்ட்டை ஆக்கிரமித்ததாக கூறுவது தவறு என தவறான தகவலை எதிர் வழக்குரையில் இந்த பிரதிவாதி கூறியுள்ளார். இந்த வழக்கில் வாதி கோரியவாறு ' C ' ஷெட்டியூல் சொத்து விளம்புகையும், சுவாதீன பரிகாரமும் கிடைக்க கூடியதல்ல என்று கூறுவது முற்றிலும் தவறாகும். ஆனால் பிரதிவாதி குறுக்கு விசாரணையில் புல எண். 96/6J ல் கிரயம் வாங்கியது 5 சென்ட் சரிதான் என ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். ஆனால் 96/6J ல் 7 சென்ட் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது என பொய்யாக வாக்குமூலம் அளித்துள்ளார். இதேபோல் 96/6J ல் நாங்கள் கிரயம் வாங்கிய 5 சென்ட் நிலத்தை தவிர மற்ற இடத்தில் உரிமை இல்லை என்றால் சரிதான் என பிரதிவாதி குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். புல எண்.96/6J ல் நான் கிரயம் வாங்கிய 15 குழி நிலத்தைத்தவிர மீதி நிலத்தை வாதிக்கு கொடுக்க ஆட்சேபனை இல்லை என பிரதிவாதி ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். மேலும் வாதியின் புல எண். 96/6J ல் 142/3 சென்ட்டில், நாங்கள் 5 சென்ட் நிலத்தை கிரயம் வாங்கியுள்ளதாக கூறியுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் வழக்கறிஞர் தாக்கல் செய்த ஆட்சேபனை மனுவில் 21 குழி கிரயம் வாங்கியதாக கூறியுள்ளேன் என்றால் 27 குழி வாங்கியுள்ளேன் என இந்த பிரதிவாதி அடுத்தவர் இடத்தை

அபகரிக்கும் நோக்கில் இந்த பிரதிவாதி பொய்யாக வாக்குமூலம் அளித்துள்ளார்.

(ix) வா.சா.2 நீதிமன்ற ஆணையர் முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதி ' B ' ஷெட்டியூல் சொத்தை பிரதிவாதிக்கு விற்றுள்ளார் என்றும், அதில் புல எண்.96/5C ல் 4 சென்டும், 96/J ல் 5 சென்டும் ஆக கூடுதல் 9 சென்டாகும் என வாக்குமூலம் அளித்துள்ளார். மேலும் 96/6J ல் மொத்தம் எத்தனை சென்ட் இருந்தது என்றால் 7 சென்ட் இருந்தது. அதில் பிரதிவாதி கிரயம் வாங்கிய 5 சென்ட்க்கு கூடுதலாக சென்ட்டை அனுபவித்து வருகிறார் என வாக்குமூலம் அளித்துள்ளார். அதில் ஆணையர் அவருடைய வரைபடத்தில் EFGH ல் எந்த 2 சென்ட் என்பதை குறிப்பிட்டுள்ளார். அந்த இடம்தான் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியாகும். ஆணையர் அறிக்கையில் புல எண்.96/6J ல் உள்ள விஸ்தீரணம் 14. 2/3 ஆகும். அதில் பிரதிவாதிக்கு விற்ற 5 சென்ட் கூடுதலாக உள்ள 2 சென்ட் மீதம் உள்ளது 7 2/3 சென்ட் ஆகும். மேலும் அவருடைய முதல் விசாரணையில் 96/6J ல் 20 சென்ட் என தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன் என்றும், ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார், காரணம் வாரண்டில் உள்ளபடி வாதி மற்றும் பிரதிவாதிக்கு விற்ற மொத்த விஸ்தீரணத்தையும் சேர்த்து மொத்த விஸ்தீரணம் 20 ஆகும். ( இது 3 புல எண்களுக்குரிய விஸ்தீரணம் ஆகும்.)

(x) நீதிமன்ற சாட்சி 2 ( சர்வேயர்) அவரை குறுக்கு விசாரணை செய்தபோது, ஆணையர் வாரண்டில் புல எண். 96/6J விஸ்தீரணம் 14 2/3 சென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், பிரதிவாதி அனுபவத்தில் 7 சென்ட் உள்ளது என்றால் சரிதான் என்றும், வாதி பிரதிவாதிக்கு கிரயம் செய்த 5 சென்டுடன் பிரதிவாதி 2 சென்ட் கூடுதலாக அனுபவித்து வந்தார் என்றும், அதை எவ்வாறு குறிப்பிடுவீர்கள் என்றால் அனுபவம் என்றுதான் குறிப்பிடுவோம் என்றும் பொய்யாக வாக்குமூலம் அளித்துள்ளார். சர்வேயரும் ஆணையரும் 2 சென்ட் கூடுதலாக உள்ள இடத்தை வரைபடத்திலும் குறிப்பிட்டுள்ளார்கள். வாதி தரப்பில் 1 முதல் 9 வரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதில் வா.சா.1 வாதி கிரயம் செய்த ஆவணமும், வா.சா.2 வாதி பிரதிவாதிக்கு கொடுத்த ஆவணமும் முக்கிய ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி வேண்டுமென்றே நான் கிரயம் கொடுத்த கிரய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. புல எண். 96/6J ல் 0.14 2/3 சென்ட் விஸ்தீரணம் வாதிக்கு உரியது. அதில் பிரதிவாதிக்கு வாதியால் விற்பனை செய்யப்பட்ட இடம் 5 சென்ட் ஆக்கிரமிப்பு 2 சென்ட் ஆக கூடுதல் (5+2 =7) 7 சென்ட் ஆகும். மீதம் வாதியிடம் 96/6J ல் 7 2/3 சென்ட் இடம் மட்டுமே உள்ளது.

(xi) ஆகவே, தாவா ' c ' ஷெட்டியூல் சொத்தைப் ( 2 சென்ட் ) பொறுத்து வாதி

உரிமையாளர் என விளம்புகை செய்தும், மேலும் தாவா ' C ' ஷெட்டியூல் சொத்தில் பிரதிவாதியால் கட்டியுள்ள கட்டிடத்தை இடித்தி காலி இடமாக வாதி வசம் சுவாதீனத்தை பிரதிவாதி ஒப்படைக்குமாறும், தாவா 'C' ஷெட்டியூல் சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதி ஒப்படைக்காத பட்சத்தில் நீதிமன்றம் மூலம் தாவா 'C' ஷெட்டியூல் சொத்தை பிரதிவாதியிடமிருந்து வசப்படுத்தி வாதி வசம் ஒப்படைக்குமாறும், செலவுத்தொகையும் கோரி தாக்கல் செய்துள்ளார்.

(xii) தாவா சொத்தை வாதியிடமிருந்து 15.12.1998 ஆம் தேதி பதிவு செய்யப்பட்ட ஒரு கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்று இந்த பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றும் தாவா புல எண். 96/6J ல் வாதி வசம் 13 சென்ட்க்கு பதிலாக 11 சென்ட் இடம் மட்டுமே உள்ளது என கூறுவது பொய் என்றும் தாவா புல எண். 96/6J ல் வாதி அனுபவத்தில் உள்ள விஸ்தீரணம் சுமார் 20 சென்ட் ஆகும். அதை ஆணையர் முன்னிலையில் நில அளவையர் அளந்து ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதி வழக்கிற்காக தாவா புல எண். 96/6J ல் தன் வசம் 11 சென்ட் மட்டுமே உள்ளது என பொய்யாக கட்சியாடி வருகிறார் எனவும், மேலும் தமது இறுதி வாதமாக 11 வருடம் கழித்து சுவாதீன பரிகாரம் கேட்பது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதிவாதி தரப்பில் வாதிடப்பட்டது.

**7. <u>எழுவினாக்கள் 1 மற்றும் 2 :</u>**

(I) வாதி மற்றும் பிரதிவாதி தரப்பில் எடுத்தாளப்பட்டுள்ள கருத்துரைகளை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலித்ததில் தாவா சொத்து தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி சார் பதிவு மாவட்டம், மைக்கேல்பட்டி கிராம புல எண். 96/6J 0.02 சென்ட் என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளாக இருந்து வருகிறது என்பதை அறிய முடிகிறது. இந்த தாவா சொத்தானது ஆதியில் இராஜேஸ்வரி என்பவருக்கு உரிமையுடையதாகும். பின்னர் வாதி தாவா 'A' ஷெட்டியூல் சொத்தை கடந்த 03.08.1988 ல் ராஜேஸ்வரியிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார். வாதி கிரையம் பெற்ற சொத்தின் முழு விஸ்தீரணமும் 20 சென்ட் ஆகும். இந்த தாவா 'A' ஷெட்டியூல் சொத்தின் விஸ்தீரணமான 20 சென்ட்ல் 15.12.1998 ல் புல எண். 96/5C ல் 4 சென்ட் மற்றும் புல எண். 96/6J ல் 5 சென்ட் ஆக கூடுதல் 9 சென்ட் பிரதிவாதிக்கு வாதியால் கிரையம் செய்து கொடுக்கப்பட்டது என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. வழக்கில் விவரிக்கப்பட்டுள்ள தாவா சொத்தை பொறுத்து தாவா 'C' ஷெட்டியூல் சொத்தை பொறுத்து வாதி உரிமையாளர் என விளம்புகை செய்தும, தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில்

பிரதிவாதியால் கட்டியுள்ள கட்டிடத்தை இடித்து காலி இடமாக வாதி வசம் சுவாதீனத்தை பிதிவாதி ஒப்படைக்குமாறும், தாவா 'C' ஷெட்டியூல் சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதி ஒப்படைக்காத பட்சத்தில் நீதிமன்றம் மூலம் தாவா 'C' ஷெட்டியூல் சொத்தை பிரதிவாதியிடமிருந்து வசப்படுத்தி வாதி வசம் ஒப்படைக்க கோரியும் பிரதிவாதிக்கு எதிராக வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கில் எழுந்துள்ள பிரதான பிரச்சனையுள்ள விஷயம் யாதெனில், தாவா 'B' ஷெட்டியூல் சொத்தை பிரதிவாதி கிரையம் பெற்ற பின்னர் மேற்படி 9 சென்ட்ல் ஒரு பகுதியில் ஓட்டுவீடு கட்டி அனுபவம் செய்து வந்தார் என்றும் தாவா ' A ' ஷெட்டியூல் சொத்தில் பிரதிவாதிக்கு 15.12.1998 ல் கிரையம் செய்து கொடுத்தது போக மீதமுள்ள சொத்தான 11 சென்ட் வாதியின் அனுபவத்தில் தொடர்ந்து இருந்து வந்தது. இந்த நிலையில் கடந்த 3 மாதத்திற்கு பின் பிரதிவாதி மேற்படி 9 சென்ட்டில் மற்றொரு பகுதியில் ஆர்.சி.சி. ஒட்டுக் கட்டிடம் கட்டி வருகிறார். அவ்வாறு ஆர்.சி.சி. ஒட்டுக்கட்டிடம் கட்டும் போது தாவா ' A ஷெட்டியூல் சொத்தில் வாதிக்கு உரிமையும், அனுபவமும் உடைய மேற்படி 11 சென்ட்டில் 2 சென்ட்டை அதாவது தாவா ' C ' ஷெட்டியூல் சொத்தாக குறிப்பிட்டுள்ளதையும் ஆக்கிரமிப்பு செய்து கட்ட முயற்சி செய்துள்ளார் என்பதே ஆகும். அதாவது வாதி பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தது 20 சென்ட்ல் 9 சென்ட் மட்டுமே கிரையம் செய்து கொடுத்தார் என்றும் அதன் பிறகு பிரதிவாதி வாதிக்குரிய மீதியுள்ள 11 சென்ட்ல் 2 சென்ட்டை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி வருகிறார் என்பது தான் இவ்வழக்கில் முக்கிய பிரச்சனையாக இருந்து வருகிறது.

(ii) மேற்படி வழக்கு சொத்துக்களை கருத்தில் கொண்டு இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை கவனமுடன் பரிசீலிக்கையில் வாதிக்குரிய 20 சென்ட்ல் 9 சென்ட் மட்டுமே பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்பது வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ–2 ஆவணத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்வழக்கில் பிரதானமான பிரச்சனை என்னவென்றால் வாதிக்குரிய 11 சென்ட் இடத்தில் 2 சென்ட்டை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து அனுபவித்து வருகிறாரரா என்பதை கவனமுடன் பரிசீலிக்கையில் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்த போது அவருடைய குறுக்கு விசாரணையில் புல எண். 96/6J ல் நாங்கள் கிரையம் வாங்கிய 5 சென்ட் நிலத்தை தவிர மற்ற இடத்தில் உரிமை இல்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தமது குறுக்கு விசாரணையில் வாதி அவர் கிரையம் வாங்கிய காலத்தில் புல எண். 96/5C ல் 4 சென்ட்ம் புல எண் 96/6J ல் 5 சென்ட்ம் எனக்கு கிரையம் செய்து

கொடுத்தார் என்றால் எனக்கு மொத்த அளவு தான் தெரியும். இந்த அளவுகள் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கிய மொத்த அளவு 27 குழி என்று சாட்சியம் அளித்துள்ளார். அதாவாது 9 சென்ட் மட்டுமே வாதியிடமிருந்து பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளதை மேற்படி சாட்சியத்திலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் மேற்படி தாவா ' C ' ஷெட்டியூல் 2 சென்ட் இடமானது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதா என்று நீதிமன்ற சாட்சியான வழக்கறிஞர் ஆணையரின் சாட்சியத்தை இங்கு மிகுந்த கவனமுடன் பரிசீக்க வேண்டியுள்ளது. அவ்வாறு பரிசீலிக்கையில் தாவா A அட்டவணை சொத்து பூதலுார் வட்டம் ஒன்பத்துவேலி கிராம புலஎண்கள். 96/5C 4 செண்ட், 96/7G 1 1/3 செண்ட், 96/6J 14 2/3 செண்ட் மொத்தம் 20 செண்ட் அது வாதிக்கு சொந்தமானது. வாதி தாவா B செட்டியூல் சொத்தை பிரதிவாதிக்கு விற்றுள்ளார். தாவா B செட்டியூல் சொத்து புல எண்கள் 96/5C ல் 4 செண்ட், 96/6J ல் 5 செண்ட் உள்ளது அதன் கூடுதல் 9 செண்ட். பிரதிவாதி வாங்கிய புல எண் 96/6J ல் மொத்தம் எத்தனை செண்ட் இருந்தது என்றால் 7 செண்ட் இருந்தது. பிரதிவாதி அவர் புல எண் 96/6J ல் கிரையம் வாங்கிய 5 செண்ட்க்கு கூடுதலான 2 செண்டை அனுபவித்து வருகிறார். அந்த 2 செண்டை நான் எனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் EFGH என்று குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதிகள் கிரையம் வாங்கியது 9 செண்ட் அவர்களுடைய அனுபவத்தில் உள்ளது 11 செண்ட். அந்த 11 செண்ட் போக வாதியிடம் 9 செண்ட் நிலம் உள்ளது. புல எண் 96/6J ல் உள்ள 14 2/3 ல் வாதி பிரதிவாதிக்கு விற்ற 5 செண்ட்ம் பிரதிவாதியின் அனுபவத்தில் கூடுதலாக உள்ள 2 செண்ட்ம் போக மீதி 7 2/3. நான் எனது அறிக்கையில் புல எண் 96/6 J ல் 20 செண்ட் என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ 1 மற்றும் 2 என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வழக்கறிஞர் ஆணையரின் சாட்சியத்தின்படி வரைபடத்தில் உள்ள 'EFGH' என்று குறிப்பிட்டு கட்டப்பட்டு தாவா சொத்தானது பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளதை நன்கு அறிந்துகொள்ள முடிகிறது. எனவே வாதி கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதென இந்த வழக்கெழு வினாக்களுக்கு தீர்வு காணப்படுகிறது.

**8.எழுவினா 3:**

வாதிக்கு எழுவினா 1 மற்றும் 2 ல் வழங்கப்பட்டுள்ள பரிகாரங்களைத் தவிர அவருக்கு வழங்கத்தக்க வேறு பரிகாரங்கள் எதுவும் இல்லையென்றும் இவ்வழக்கு தரப்பினர்களின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு அவரவர் செலவுத்தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இந்த வழக்கெழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவில், தாவா 'C' ஷெட்டியூல் சொத்தைப் பொறுத்து வாதி உரிமையாளர் என விளம்புகை செய்யப்பட்டு, தாவா 'C' ஷெட்டியூல் சொத்தில் பிரதிவாதியால் கட்டியுள்ள கட்டிடத்தை மூன்று மாதங்களுக்குள் இடித்து காலி இடமாக வாதி வசம் சுவாதீனத்தை பிரதிவாதி ஒப்படைக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஜீலை மாதம் 27 ஆம் நாள் வியாழன்கிழமையாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**/ஒ.ம்/பெ.சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**திருவையாறு.**

**பின் இணைப்பு:**

வாதி தரப்பு சாட்சி:

வா.சா.1: ஜெசிந்தா

வாதி தரப்பு சான்றாவணங்கள்:

வா.சா.ஆ.1. 03.08.1988 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.2. 14.12.1998 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.3. 24.10.2015 தேதியிட்ட கணினி பட்டா

வா.சா.ஆ.4. 24.10.2015 தேதியிட்ட பதிவிறக்கம் செய்யப்பட்ட 'அ' பதிவேடு விபரங்கள்

வா.சா.ஆ.5. 24.10.2015 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ்

வா.சா.ஆ.6. – பதிவிறக்கம் செய்யப்பட்ட வழிகாட்டு மதிப்பீடு

வா.சா.ஆ.7. 14.10.2015 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்

வா.சா.ஆ.8 – புல வரைப்பட நகல்

வா.சா.ஆ.9. – புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு

**பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை**

**நீதிமன்ற தரப்பு சாட்சிகள்:**

நீ.ம.சா.1 R. பழனி வழக்கறிஞர்

நீ.ம.சா.2 சத்தியபாமா

**நீதிமன்ற தரப்பு சான்றாவணங்கள்:**

நீ.ம.சா.ஆ.1 அறிக்கை

நீ.ம.சா.ஆ.2 வரைபடம்

**/ஒ.ம்/பெ.சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**திருவையாறு.**